நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.180/2019

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | நல்லசிவம் |
| தந்தை / கணவர் பெயர் | : | நாச்சியப்பன் |
| கிராமம் | : | கோவில்பாளையம் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 59 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.05.PM

1. இந்த வழக்கு சம்மந்தமான தகவல் சிறப்பு இலக்கு படையின் மூலமாகத்தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இருப்படையினரும் ஒன்றாகத்தான் ரோந்துக்கு சென்றோம். நான் சொல்வது தவறு என்றாலும் சிறப்பு இலக்கு படையினர் வனச்சரகர் அலுவலகம் வந்து தான் தகவல் சொன்னார்கள் என்றால்

சரியல்ல. அதனடிப்படையில்தான் வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கில் குற்ற நிகழ்வு அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றால் குற்ற நிகழ்வு அறிக்கை என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தகவல் கிடைத்து நாங்கள் செல்லவில்லை. வழக்கமான ரோந்து பணிக்குதான் நான், வனவர் குப்புசாமி, வனக்காப்பாளர் ராதா ஆகியோர்கள் இரவு 07.30 மணிக்கு கொளத்தூர் செக்போஸ்ட்டில் இருந்து சென்றோம்.

3. நாங்களும் சிறப்பு இலக்கு படையினரும் கொளத்தூரிலிருந்து ஒன்றாகத்தான் சென்றோம். நாங்களும் சிறப்பு இலக்கு படையினரும் வாரத்திற்கு 2-3 நாட்கள் ஒன்றாக ரோந்து செல்வது வழக்கம். அப்படித்தான் சம்பவம் நடந்த நாளன்று ரோந்துக்கு சென்றோம். சம்பவம் நடந்த தேதி 11.11.2012 ஆகும். நாங்களும் சிறப்பு இலக்கு படையினரும் ஒன்றாக சேர்ந்து ரோந்து செல்வதற்கு தனிப்பட்ட முறையில் எந்தவொரு எழுத்துபூர்வமான உத்தரவும் கிடையாது. வனச்சரகர் அலுவலர் வாய்மொழி உத்தரவின் பேரில் நாங்கள் செல்வோம். அன்றைய தினமும் மேற்படி உத்தரவின் பேரில்தான் ரோந்துக்கு சென்றோம்.

4. சுமார் இரவு 08.00 மணிக்கு சின்னகாவல்திட்டு மாரியம்மன் கோவில் அருகில் ரோந்துக்கு சென்றபோது ஒரு உருவம் காவேரி நீர்பிடிப்பு பகுதி(முழுவடை) யிலிருந்து வெளிப்பகுதிக்கு வந்தது. கோவிந்தபாடி டு மாதேஸ்வரன் மலை செல்லும் மெயின்ரோட்டில் இருந்து காரைக்காடு செக்போஸ்ட் அருகே காவிரி ஆற்றை நோக்கி செல்லும் மண்ரோட்டில் நாங்கள் நின்றுக்கொண்டிருந்தபோது இருட்டில் ஒரு உருவம் எங்களை நோக்கி வந்துக்கொண்டிருந்தது.

5. காரைக்காடு சோதனைசாவடியிலிருந்து சின்னகாவல்திட்டு மாரியம்மன் கோவிலுக்கு 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும். சிறப்பு இலக்கு படை உதவி ஆய்வாளர் மேற்படி வந்த நபரை நிறுத்தி விசாரணை செய்தார். நான் பக்கத்தில்தான் இருந்தேன். என் முன்னிலையில்தான் விசாரித்தார். சம்பவத்தின்போது காரைக்காடு பகுதி சோதனை சாவடி இல்லை. தற்போதுதான் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

6. விசாரிக்கும் அந்த நபர் தனது பெயர் வெள்ளையன் என்று சொன்னார். அவரது கையில் இறந்துபோன உடும்பு இருந்தது. அங்கேயே வைத்து வனவர் குப்புசாமி

பிடிபொருள் மகசர் ( H நமுனா) தயார் செய்தார். சிறப்பு இலக்கு படையை சேர்ந்த ஆய்வாளர் விசாரித்து சம்பவயிடத்திலேயே ஸ்தல மகசர் தயார் செய்தார். நான் பிடிபொருள் பட்டியல்( படிவம் 95) வனச்சரகர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்தேன். சுமார் இரவு 09.00 மணிக்கு சம்பவயிடத்தில் வைத்து H நமுனாவை தயார் செய்தார்கள்.

7. H நமுனாவில் நான் கையெழுத்து செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 ஆவணமான படிவம் 95 என் கைப்பட தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இதில் என் கையொப்பம் இட்டு அதன் கீழ் 11.11.2012 என்று நாள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஒரு படிவம் 95 தான் தயார் செய்தோம். என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த படிவம் 95 ஆகும்.

8. சிறப்பு இலக்கு படையனிர் H நமுனாவை 11.11.2012 ம் தேதி இரவு 09.00 மணிக்குதான் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4 சிறப்பு இலக்கு படையினர் தயார் செயத் மகசரில் எந்த தேதிக்கு எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் இரண்டாவது காலத்தில் கைப்பற்றப்பட்ட இடம் என்ற இடத்தில் குரும்பனூர் வடக்கு பீட் என்பதை ஒயிட்னர் வைத்து திருத்தம் செய்து அதன்மேல் எழுதியுள்ளார்கள் என்றால் சரிதான்.

9. சிறப்பு இலக்கு படையினர் மேட்டுர் வனச்சரகர் அலுவலகத்தில் வந்து ஒப்படைக்கும்போது தனியறிக்கை ஏதாவது தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக சிறப்பு இலக்க படையினர் எந்தவொரு தனியறிக்கையும் கொடுக்கவில்லை. அ.சா.ஆ.5 தனியறிக்கைதான் சிறப்பு இலக்கு படையினரை சேர்ந்த காவல் உதவி ஆய்வாளர் வனச்சரகர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட தனியறிக்கை என்றாலும் சரிதான்.

10. சம்பவயிடத்தில் எதியுடன் ஒரு நாய் வந்ததை பார்த்தேன். அ.சா.ஆ.7 ஆவணத்தில் சம்பவயிடமாக காட்டப்பட்டுள்ள பகுதி வீரக்காரன்கள்ளு பக்கத்தில்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் சின்னகாவல்திட்டு மாரியம்மன்கோவில் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த மேப் 1973 ல் தயார் செய்யப்பட்டது. அதில் அந்த விவரங்கள் குறிப்பிடப்படவில்லை.

11. 20 வருடத்திற்கு முன்பாகவே இருந்து மேற்படி கோவில் உள்ளது. வனத்துறையினர் மேப்பில் கோவில் உட்பட முக்கியமான பகுதிகள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். உண்மையில் நான் தாக்கல் செய்த வரைபடம் வனத்துறை சேர்ந்தது என்றால் அதில் சின்னகாவல்திட்டு மாரியம்மன்கோவில் உள்ள விவரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

12. எதிரியின் வீடு ஊஞ்சகொறை பகுதியில் உள்ளது. ஊஞ்சகொறை கிராமம் வனத்துறை காட்டுக்கு ஒட்டியவாறு உள்ளது. பொதுவாக அந்த ஊர்க்காரர்கள் பாதுகாப்பிற்காக நாய்கள் வளர்ப்பது வழக்கம் என்றால் சரிதான். எதிரியும் அதுப்போலத்தான் நாய் வளர்த்தி வந்தார் என்றால் வளர்த்தி இருக்கலாம்.

13. வனப்பகுதியை ஒட்டியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் ஆடுமாடுகளுக்கு இலை பறிக்கவேண்டி வனப்பகுதிக்குள் வருவார்கள் என்றால் சரிதான். அதுப்போலத்தான் சம்பவதன்று எதிரி காலை சுமார் 10.00–11.00 மணிக்கு ஆடு மாடுகளுக்கு இலைதலை பறிப்பதற்காக எதிரி வனப்பகுதிக்கு வந்தார் என்றாலும், அப்போது அங்கேயிருந்த இறந்துபோன உடும்பை எடுத்து சிறப்பு இலக்கு படையினர் எதிரிமீது ஒரு பொய்யான தனியறிக்கை கொடுத்து அதன்பேரில்தான் இவ்வழக்கு வனத்துறையினரால் பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14. வனத்துறையினர் யாரும் சம்பவயிடத்திற்கே செல்லாமலும், சிறப்பு இலக்கு படையினர் கொடுத்த பொய் தனியறிக்கையின் பேரில் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியிடம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் உடும்பை எதிரியையும், உடும்பையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதித்துறை நடுவர் கொடுத்த உத்தரவின் பேரில் கால்நடை மருத்துவர் மூலம் பிரேதபரிசோதனை செய்து அவற்றை கால்நடை மருத்துவர் முன்னிலையில் வனச்சரகர் அலுவலகத்தில் புதைக்கப்பட்டது.

15. நான் சொன்னவாறு சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சிறப்பு இலக்கு படையினர் கீழே கிடந்த உடும்பை எடுத்து அந்த பகுதிக்கு எதிரி ஆடுமாடுகளுக்கு உணவுதேவைக்காக வந்தபோது அவர் மீது ஒரு பொய்யான தனியறிக்கை கொடுத்ததின் பேரில் ஒரு பொய் வழக்க பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அதற்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—02.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**